සියලුම හිමිකම් ඇවිරිණි/ முழுப் பதிப்புரிமையுடையது / All Rights reserved

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

தரம் 09 | முதலாம் தவணைப் பரீட்சை - 2019 | 61 T

# புவியியல்

சுட்டெண் ........................................... | நேரம் 2 மணித்தியாலம்

## பகுதி I

- **எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை தருக.**
- **01 முதல் 05 வரையான வினாக்களின் இடைவெளிகளுக்குப் பொருத்தமான விடையை அடைப்பினுள் இருந்து தெரிந்தெடுத்து புள்ளிக்கோட்டில் எழுதுக.**

01. ஆசியாக் கண்டம் புவியின் வடஅரைக்கோளத்தின் ................................................ அரைப்பகுதியில் அமைந்துள்ளது.
(மேற்கு / கிழக்கு / தெற்கு)

02. புவியின் முழுநிலப்பகுதியில் ...................................... ஆசியாக் கண்டத்துக்கு உரித்துடையதாகும்.
(30% / 50% / 60%)

03. உலகில் அதிக சனத்தொகையை கொண்ட .................................. ஆசியாக் கண்டத்திற்கு உரிய நாடாகும்.
(இந்தோனேசியா / இந்தியா / சீனா)

04. யூரல்நதி ................................. கடலை சென்றடைகின்றது.
(ஏரல் / கஸ்பியன் / கருங்கடல்)

05. கடுங்குளிர் காலநிலை நிலவும் வலயங்களில் .............................. காடுகள் காணப்படுகின்றது.
(ஊசியிலை / இலையுதிர் / அயனமழை)

- **இலக்கம் 06 முதல் 10 வரையான வினாக்களை வாசித்து அவை சரியாயின் (✓) எனவும், பிழையாயின் (✗) எனவும் கொடுக்கப்பட்டுள்ள அடைப்பினுள்ளே அடையாளமிடுக..**

06. உலக சனத்தொகையில் அரைவாசிக்கு மேற்பட்டோர் ஆசியாக் கண்டத்தில் வாழ்கின்றார்கள். (    )

07. யப்பானில் முழுமையாக மூலப்பொருட்கள் மற்றும் கனிய வளங்கள் என்பனவற்றில் இறக்குமதிகளின் அடிப்படையிலேயே கைத்தொழில்கள் மேற்கொள்ளப்படுகிறது. (    )

08. கங்கை நதி ஆசியாவின் மிக நீளமான நதியாகும். (    )

09. டெகான் மேட்டுநிலம் உலகின் முகடு எனப்படுகின்றது. (    )

10. டுபாய், எமிரேட் மாநிலங்கள் 7 இல் ஒன்றாகும். (    )

- **இலக்கம் 11 தொடக்கம் 20 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான விடையினை தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

11. ஆசியாக் கண்டத்தில் அமைந்துள்ள பின்வரும் தீவுகளில் மிகச்சிறிய தீவு எது?
1. பிலிப்பைன் தீவு    2. நிக்கோபார் தீவு    3. இலங்கை    4. தாய்வான்

12. ஆசியாவுக்கு உரித்தகாத பழைய நதிக்கரை நாகரீகம் பின்வருவனவற்றுள் எது?
1. இந்து நதி நாகரீகம்    2. குவாங்கோ நதி நாகரீகம்
3. யூப்ரடீஸ், தைகிரீஸ் நாகரீகம்    4. நைல் நதி நாகரீகம்.

13. கீழே குறிப்பிடப்படும் ஏரிகளில் ஆசியாவில் காணப்படும் உலகின் மிக ஆழமான நன்னீர் ஏரி எது?
1. பைக்கால் ஏரி    2. பொல்காஸ் ஏரி    3. அயர் ஏரி    4. விக்டோரியா ஏரி

14. மோட்டார் வாகன உற்பத்தியில் பிரதான இடத்தைப் பெறும் யப்பானிய நிறுவனங்கள் இரண்டையும் காட்டும் விடைகளை தெரிவு செய்க.
1. டொயாட்டா, ஹொண்டா    2. ஹொண்டா, யமஹா
3. யமஹா, மிற்சுபிசி    4. நிசான், கவசாகி

15. மணற் திட்டுக்களுடன் ஒடுங்கிய வாய்ப்பகுதியுடன் கடலுடன் தொடர்புபட்ட உவர் நீரினைக் கொண்ட நிலப்பகுதிக்கு வழங்கப்படும் பெயர் என்ன?
1.சதுப்பு நிலம் 2. டெல்டா 3. களப்பு 4. குடா

- **இலக்கம் 16 முதல் 20 வரையான வினாக்களுக்கு "அ" நிரலில் தரப்பட்டுள்ள தகவல்களுக்கு பொருத்தமான விடையை "ஆ" நிரலில் இருந்து தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தை எதிரே உள்ள அடைப்பினுள் எழுதுக.**

| **"அ"** | | **"ஆ"** |
|---|---|---|
| 16. அயன மலைக்காடுகள் | (    ) | A. வர்கோயேன்ஸ்க |
| 17. இலையுதிர் காடுகள் | (    ) | B. பைன், ஸ்புரூஸ் |
| 18. ஊசியிலைக் காடுகள் | (    ) | C. ஜகோ பாபாத் |
| 19. ஆசியாவில் குறைந்த வெப்பநிலை | (    ) | D. ரோஸ்வுட், மகோகனி |
| 20. ஆசியாவில் அதிக வெப்பநிலை | (    ) | E. ஓக், மல்பெரி |


(2x20=40 புள்ளிகள்)

* * * * *

## பகுதி II

- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **முதலாம் வினா உட்பட 5 வினாக்களுக்கு விடையளிக்க.**
  **(விடையளிக்க வேறு தாளினைப் பயன்படுத்தவும்)**

01. கீழே தரப்பட்டுள்ள ஆசியப்படத்தை பயன்படுத்தி கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.




அ) 1. A எழுத்தால் காட்டப்படும் மலைத்தொடரை பெயரிடுக. (பு.01)
2. B எழுத்தால் காட்டப்படும் நதியை பெயரிடுக. (பு.01)
3. மஞசல்கடலை காட்டும் எழுத்து யாது? (பு.01)
4. E எழுத்தால் காட்டப்படும் நாடு எது? (பு.01)
5. G எழுத்தால் காட்டப்படும் மேட்டுநிலம் எது? (பு.01)
6. ஜாவாத் தீவு எந்த எழுத்தால் காட்டப்பட்டுள்ளது? (பு.01)
7. K எழுத்தால் காட்டப்படும் பௌதிக அம்சம் யாது? (பு.01)
8. கிழக்கு நெடுங்கோடு $25^0$ கோட்டை காட்டும் எழுத்து எது? (பு.01)

ஆ) ஆசியாவை ஐரோப்பாவிலிருந்தும் ஆபிரிக்காவிலிருந்தும் வேறுபடுத்தும் எல்லைகள் 1, 2, 3, 4 என்ற இலக்கங்களால் காட்டப்பட்டுள்ளது. இவற்றைப் பெயரிடுக.
(1) .............................. மலைத்தொடர் (2) .............................. கடல்
(3) .............................. கால்வாய் (4) .............................. கடல் (பு.08)

02. ஆசியா கண்டத்தில் காணப்படும் காலநிலை வகைகளை அடிப்படையாகக் கொண்டு இடைவெளிகளை நிரப்புக.

| காலநிலை வலயம் | காலநிலை வகை | பரவியுள்ள நாடுகள் |
|---|---|---|
| அயன வலயம் | 1. ..........................................................<br>அயன பருவக்காற்று காலநிலை<br>3. ..........................................................<br><br>வெப்ப பாலைவனக் காலநிலை | யாவா, சுமத்ரா தீவுகள்<br>2. ............., ................, மியன்மார்<br>இந்தியாவின் வடகிழக்குப் பகுதி<br>பங்களாதேஷ் |
| இடைவெப்ப வலயம் | இளஞ்சூடான இடைவெப்ப காலநிலை<br><br>6. .......................................................... | 4. ..........................................................<br><br>5. ..........................................................<br>கிழக்கு சீனா, யப்பான் தீவுகள் |
| குளிர் வலயம் | 7. ..........................................................<br><br>மலைக்காலநிலை | சைபீரிய பிரதேசம், ஆசியாவின் வடபகுதி<br>8. .......................................................... |

(பு.08)

2. காலநிலையை வகைப்படுத்துவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் மூன்றை எழுதுக. (பு.03)

03. 1. ஆசியாக் கண்டத்தில் வாழக்கூடிய மனித இனங்கள் இரண்டு கீழே படத்தில் காட்டப்பட்டுள்ளன. இவ்விரண்டு மனித இனங்களையும் பெயரிட்டு இவர்கள் வாழும் நாடுகள் இவ்விரண்டையும் குறிப்பிடுக.

A





B

மானிட இனம் - A ............................................ B ...............................................
வாழும் நாடு - 1. 1.
2. 2.

(பு.06)

2. ஆசியா கண்டத்தின் சனத்தொகை பரவல் தொடர்பான பின்வரும் அட்டவணையை பூரணப்படுத்துக.

சனத்தொகை பரவல்

| செல்வாக்கு செலுத்தும் பௌதிக காரணிகள் | அதிக சனத்தொகை அடர்த்தி | சனத்தொகை குறைந்த பகுதி |
|---|---|---|
| 1. ....................................... | 3. ...................................... | 5. ....................................... |
| 2. ....................................... | 4. ...................................... | |

(பு.05)

04. 1. பாகிஸ்தானின் பிரதான இரண்டு பருவங்கள் காலம் மற்றும் பயிரிடப்படும் பயிர்கள் தொடர்பான பின்வரும் அட்டவணையை பூரணப்படுத்துக.


| பயிரிடும் பருவம் | காலப்பகுதி | பயிரிடப்படும் பயிர்கள் |
|---|---|---|
| காரிப் | 1. ......................................................... | 2. ........................................................<br>3. ........................................................ |
| 4. .......................... | நவம்பர் தொடக்கம் மார்ச் வரை | 5. ........................................................<br>6. ........................................................ |

(பு.06)

2. யப்பானின் மோட்டார் வாகனங்கள் உலகில் பிரசித்தி பெறுவதற்கான காரணங்கள் மூன்றை குறிப்பிடுக. (பு.03)

3. யப்பானின் பெற்றோ, இரசாயன கைத்தொழிலுடன் தொடர்புடைய உற்பத்திகள் இரண்டைக் குறிப்பிடுக. (பு.02)

05. 1. ஆசியாக் கண்டத்தை காட்டும் இப்படத்தில்,




(I) பாகிஸ்தான்

(ii) ஜப்பான்


(iii) டுபாய் ஆகிய நாடுகளை காட்டும் ஆங்கில எழுத்துக்களை முறையாகக் குறிப்பிடுக. (பு.03)

2. a) டுபாய் நாட்டின் பொருளாதாரம் எந்த உற்பத்தியை மையமாகக் கொண்டுள்ளது.

b) டுபாய் சேவை நிலையமாக விருத்தியடைவதற்கு பிரதான காரணி யாது? (பு.02)

3. டுபாய் நாட்டின் சேவைக் கைத்தொழில்கள் 3 ஐக் குறிப்பிடுக. (பு.06)

06. 1. இலங்கையின் பிரதான தரைத்தோற்ற பிரிவுகளை காட்டும் இப்படத்தில் இல. 1, 2, 3 னால் காட்டப்படும் தரைத்தோற்றப் பிரிவுகளை பெயரிடுக.




(பு.03)

2. கடல் மட்டத்திலிருந்து அமைந்துள்ள தூரத்தின் அடிப்படையில் இந்த ஒவ்வொரு தரைத்தோற்றப் பிரிவுகள் தொடர்பான அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| தரைத்தோற்ற வலயம் | கடல்மட்டத்திலிருந்து உயரம் (மீற்றரில்) |
|---|---|
| 1. ......................................... | ............................................................................. |
| 2. ......................................... | ............................................................................. |
| 3. ......................................... | ............................................................................. |

(பு.03)

3. படத்தில் AB மற்றும் C இனால் காட்டப்படும் தரைத்தோற்ற பண்புகளை பெயரிட்டு இவற்றிற்கு ஒவ்வோர் உதாரணம் தருக. (பு.05)

07. <u>இடமிருந்து வலம்</u>

1. ஆசிய வலயத்தில் வாழும் மனித இனம் ஒன்று
2. வடமாகாணத்திற்கு சொந்தமான மாவட்டம் ஒன்று
3. மஞ்சள் நதி எனப்படும் சீனாவின் நதி.
4. சனச்செறிவு கொண்ட 10 நாடுகளுள் ஒன்று
5. கடலை நோக்கி விரிவடைந்து காணப்படும் உவர் நீர் நிறைந்த நிலப்பகுதி

<u>மேலிருந்து கீழ்</u>

1. கிழக்காசியாவில் அமைந்துள்ள நாடு ஒன்று.
6. யப்பானின் பிரதான மோட்டார் சைக்கிள் உற்பத்தி நிறுவனம் ஒன்று
3. அயன மழைக்காட்டில் வாழும் விலங்கு
7. ஆசியாவில் உள்ள பாலைவனம் ஒன்று
8. ஊசியிலைக் காட்டு மரம் ஒன்று
9. ஆசியாவை ஐரோப்பாவிலிருந்தும் வேறுபடுத்தும் கடல்களுள் ஒன்று.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 1 கொ | | | யி | | |
| 6 க | | | | | | | | 9 |
| 2 | | னி | | | | | | |
| சா | | | | | | | | பி |
| | | 3 கு | | | 7 கோ | | | |
| | | | | | 4 | லி | 8 | |
| | | | | | | | | |
| | | 5 | | | | | | |

**வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்**
**முதலாம் தவணைப் பரீட்சை - 2019**
**தரம் 09 - புவியியல் (61)**
**விடைப்பத்திரம்**

**பகுதி I**

| வினா இல. | | விடை | வினா இல. | | விடை |
|---|---|---|---|---|---|
| 01. | | கிழக்கு | 02. | | 30% |
| 03. | | சீனா | 04. | | கஸ்பியன் |
| 05. | | இலையுதிர் | 06. | | சரி |
| 07. | | சரி | 08. | | பிழை |
| 09. | | பிழை | 10. | | சரி |
| 11. | | 2 | 12. | | 4 |
| 13. | | 1 | 14. | | 2 |
| 15. | | 3 | 16. | | D |
| 17. | | E | 18. | | B |
| 19. | | A | 20. | | C |

**பகுதி II**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01. | அ) | 1. | | மேற்கு சாட்ஸ் | 1 |
| | | 2. | | இந்துநதி (சிந்து நதி) | 1 |
| | | 3. | | D | 1 |
| | | 4. | | சீனா | 1 |
| | | 5. | | ஈரான் மேட்டுநிலம் | 1 |
| | | 6. | | J | 1 |
| | | 7. | | பாக்கு நீரிணை | 1 |
| | | 8. | | L | 1 |
| | ஆ) | 1. | | யூரல் மலை | |
| | | 2. | | கஸ்பியன் கடல், சுயெஸ் கால்வாய் | |
| | | 3. | | செங்கடல் | 8 |
| | | | | | 16 |
| 02. | 1. | | 1. | அயன மழைக்காலநிலை | |
| | | | 2. | இந்தியா, இலங்கை | |
| | | | 3. | அயன சவன்னா காலநிலை | |
| | | | 4. | இந்தியா, தார்பாலைவனம், மத்திய கிழக்கு நாடுகள் | |
| | | | 5. | மத்தியதரைக்கடல் சூழ்ந்த பகுதி | |
| | | | 6. | இடைவெப்ப ஈரக் காலநிலை | |
| | | | 7. | முனைவு மற்றும் துந்திரா காலநிலை | |
| | | | 8. | இமய மலைத்தொடரை சார்ந்த பகுதிகள் | 8 |
| | 2. | | | பருவக்காற்றின் செல்வாக்கு, சமுத்திர செல்வாக்கு, கண்ட அமைவிடம் மலைத்தொடர்களின் அமைவிடம், கடல்மட்டத்திலிருந்து உயரம் | 3 |
| | | | | | 11 |
| 03. | 1. | | | A. மொங்கலைட்<br>நாடுகள் - சீனா, யப்பான், மலேசியா, கொரியா<br>B. கொக்கசைட்<br>நாடுகள் - இந்தியா, பாகிஸ்தான், இலங்கை<br>பொருத்தமான ஏனைய நாடுகளுக்கும் புள்ளி வழங்குக. | 6 |
| | 2. | | | சனத்தொகை பரம்பலுக்கான காரணி<br>* தரைத்தோற்றம் * காலநிலை * வடிகாலமைப்பு * மண்<br>சனத்தொகை கூடிய வலயம்<br>* தென் ஆசியா * தென் கிழக்கு ஆசியா * கிழக்காசியா | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | சனத்தொகை குறைந்த பகுதிகள்<br>* மத்திய ஆசியா * மொங்கோலியா * வடக்கு சமவெளி<br>* கோபி * தார் பாலைவனம் | 5<br>11 |
| 04. | 1.<br><br><br><br><br>2.<br><br>3. | | | 1. ஏப்ரல் தொடக்கம் ஒக்டோபர் வரை<br>2. பருத்தி, நெல், திணை , சோளம், பருப்பு<br>3. பருத்தி, நெல், திணை , சோளம், பருப்பு<br>4. ராபி<br>5. சோளம், பார்லி, ஓட்ஸ்<br>உயர் தரம், நீடித்த பாவனை, வினைத்திறனான எரிபொருள் பாவனை, அதிசொகுசுத் தன்மை, அதிநவீன உதிரிப்பாகங்கள்<br>பிலாஸ்திக், பொலியஸ்டர், பொலிப்பிறோபலின் | 6<br>3<br>2<br>11 |
| 05. | 1.<br>2.<br><br>3. | <br>a)<br>b) | | B, C, A<br>கனிய நெய்<br>டுபாயின் பௌதிக சூழல் விவசாய நடவடிக்கைகளுக்கு பொருத்தமற்றதாக காணப்படுவதனால்<br>பாடப்புத்தகம் பக்கம் 24 ல் உள்ள விடைகள். | 3<br>2<br>6<br>11 |
| 06. | 1.<br><br><br>2.<br><br><br>3. | | | 1. கரையோர சமவெளி<br>2. உள்ளகச் சமவெளி<br>3. மத்திய மலைநாடு<br>1. 0 - 30 m<br>2. 30m - 300m<br>3. 300m - அதிகம்<br>A. தீவு - மன்னார், ஊர்காவற்றுறை, நயினா தீவு, நெடுந்தீவு<br>B. குடா - கொட்டியாரக்குடா, அறுகம் குடா, வெலிகமகுடா<br>C. முனை - தேவேந்திர முனை, பவுல் முனை, சங்கமன்கந்த முனை, பருத்தித்துறைமுனை | 3<br>3<br>5<br>11 |
| 07. | <br>1.<br>2.<br>3.<br>4.<br>5.<br><br><br>1.<br>6.<br>3.<br>7.<br>8.<br>9. | | | இடமிருந்து வலம்<br>கொகசொயிட்<br>வவுனியா<br>குவாங்கோ<br>பிலிபைன்<br>குடா<br><br>மேலிருந்து கீழ்<br>கொரியா<br>கவசாகி<br>குரங்கு<br>கோபி<br>பைன்<br>கஸ்பியன் | 11 |

* * * * *